**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி**

**O.S. No.52/2021**

2026 –ம் ஆண்டு ஜனவரி மாதம் 20 –ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வா.சா.3 வாக்குமூலம் 1969ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி இந்நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரான திரு. R. சீனிவாசன், Bench Clerk (Gr–III) அவர்களால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

**நாள் : 20.01.2026**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. கணபதி (PW–3 ) | வயது | : | 65 /2025 |
| த/க பெயர் | : | திரு. குப்பன் | தொழில் | : | விவசாயம் |
| முகவரி | | ஆலாத்தூர் | வட்டம் | : | மன்னார்குடி |

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க இந்நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வரவில்லை என்றால் சரிதான். வாதி தான் அழைத்து வந்தார் என்றால் சரிதான். தாவா சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்தானது பாப்பையன், பூங்கொடியின் அப்பா தங்கவேலுக்கு அரசாங்கத்தால் கொடுக்கப்பட்ட சொத்து என்றால் சரிதான்.

2) பிரதிவாதியின் அப்பா தங்கவேல் வாதிக்கோ வாதியின் அப்பாக்கோ தாவா சொத்துக்களை பதிவு பெற்ற ஆவணம் மூலம் கிரயம் கொடுக்கவில்லை என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது, பஞ்சாயத்து மூலம் வாதியின் அப்பாவிற்கு கொடுத்தார். எந்த தேதியில் பஞ்சாயத்து நடந்தது என்றால் கடந்த 30 வருடத்திற்கு முன்பு நடந்ததால் ஞாபகம் இல்லை. அதில் ஆவணம் எதுவும் எழுதி நான் கையெழுத்திட்டேனா என்றால் கிராம பஞ்சாயத்து நோட்டில் கையெழுத்திட்டேன்.

3) அந்த கிராம பஞ்சாயத்து நோட்டு தற்போது யார் வசம் உள்ளது என்றால் வாதியின் அப்பாவிடம் கொடுத்தோம், அவர் இறந்து தற்போது 10 வருடம் ஆகிறது. பிரதிவாதிகள் மோசடியாக ஆவணங்கள் ஏற்படுத்தியதாக எனது நிருபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளதால் என்ன ஆவணம் எற்படுத்தப்பட்டது என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதிகள்

வாதியின் மீது வழக்கு தாக்கல் செய்துள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

4) இந்த வழக்கு எதற்காக தாக்கல் செய்யப்பட்ட விபரம் எனக்கு தெரியாமல் வாதி கேட்டுக்கொண்டதன் பேரில் பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியவாறு பிரதிவாதிகளின் தந்தை வாதியின் தந்தைக்கு எந்தவித ஆவணத்தையும் எழுதி கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
DN: cn=NATARAJAN AZHAGESAN, ou=THANJAVUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.01.06 16:09:22 +0530

District Munsif
Mannargudi.